செ.வெ.எண் :650 நாள்: 05.10.2021

# பத்திரிக்கை செய்திக்குறிப்பு

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவிகளுக்காக மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும் பள்ளிகளிலேயே வேலைவாய்ப்பு அலுவலக பதிவுப்பணி நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவிகள் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, சாதிச்சான்றிதழ், கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட விவரங்களுடன் மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும் நாளன்று தங்களது பள்ளிக்கு எடுத்து செல்ல வேண்டும்.

04.10.2021-ஆம் நாள் முதல் 18.10.2021 ஆம் நாள் வரை வேலைவாய்ப்பு பதிவுப்பணி அந்தந்த பள்ளிகளிலேயே நடைபெறும். பதிவுப்பணி நடைபெறும் 15 நாட்களுக்கும் மதிப்பெண் சான்று வழங்க தொடங்கிய முதல் நாளானது பதிவுமூப்பு தேதியாக வழங்கப்படும். மேலும் https://tnvelaivaaippu.gov.in/Empower/ என்ற வேலைவாய்ப்புத்துறையின் இணையதளம் வழியாகவும் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய விரும்பும் அனைத்து மாணவ/மாணவியர்களும் இந்த வசதியை பயன்படுத்திகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் மேற்படி பதிவுகள் மேற்கொள்ளும்போது அரசு விதித்துள்ள கொரோனா வழிமுறைகளான சமூக இடைவெளி பின்பற்றுதல், முகக்கவசம் அனிதல், அவ்வபோது சோப்பினால் கைகளை கழுவுதல் மற்றும் கிருமி நாசினி பயன்படுத்துதல் போன்றவைகளை கடைபிடிக்குமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்.இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**